**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். கமுதி**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கமுதி**
**2026 ஆம் வருடம் ஜூன் மாதம் 05 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 47/2020**
**CNR. NO.TNRM070005222020**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | அபிராமம் காவல்நிலையம் குற்ற எண் – 23/2020 |
| எதிரியின் விபரம் | | |
| 2. | பெயர் | முத்துச்செல்வம் |
| 3. | த/பெ. | மகாலிங்கம் |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | மேலப்பண்ணைக்குளம், முதுகுளத்தூர் தாலுகா |
| 6. | வயது | 31/20 |
| 7. | சம்பவ நாள் | 11-02-2020 ம் தேதி 15.00 மணி |
| 8. | புகார் தேதி | 14-02-2020 ம் தேதி 09.00 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 14-02-2020 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 23-03-2020 |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 13-03-2020 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 03-06-2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 03-06-2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 354, 323, 506(2) and 4 of TNPHW Act ன் கீழ் |



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.05 15:23:01 +0530

<table>
<tr><td></td><td>வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 354, 323, 506(2) and 4 of TNPHW Act ன் கீழ்</td></tr>
<tr><td>15.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td>எதிரியின் வருகையின்மையால்</td></tr>
<tr><td>16.</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td><table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>03.06.2026</td><td>03.06.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>03.06.2026</td><td>03.06.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>03.06.2026</td><td>03.06.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>03.06.2026</td><td>03.06.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>17.</td><td>எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1) (ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>05-06-2026</td></tr>
<tr><td>18.</td><td>எதிரி தரப்பு சாட்சிகள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>19.</td><td>எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>U/s. 320 Cr.P.C Petition filed and dismissed in M.P. No. 08/2026, dated: 03.06.2026</td></tr>
<tr><td>20.</td><td>எதிரி/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>U/s. 311 Cr.P.C Petition filed and allowed in M.P. No. 10/2026, dated: 03.06.2026</td></tr>
<tr><td>21.</td><td>எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>1. U/s.70(2) Cr.P.C Petition filed and allowed in Cr.M.P.No.03/2025, dt. 27.10.2025<br>2. U/s.70(2) Cr.P.C Petition filed and allowed in M.P.No.07/2026, dt. 01.06.2026</td></tr>
<tr><td>22.</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர்</td><td>திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி</td></tr>
<tr><td>23.</td><td>எதிரி தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு. L. வேலவன்</td></tr>
</table>



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.05 15:23:08 +0530

| | | |
|---|---|---|
| 24. | எதிரியின் கூற்று | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 25. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 05-06-2026 |
| 26. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 05-06-2026 |
| 27. | நீதிபதியின் முடிவு | முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 294(பி), 354, 323, 506(2) and 4 of TNPHW Act ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 248 (1) ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.<br>இவ்வழக்கில் தடயசொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடயசொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த வழக்கு 13-03-2020 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 05-06-2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-1 திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. L. வேலவன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(05-06-2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : -**

1. கடந்த 11.02.2020 ம் தேதி மாலை சுமார் 03.30 மணியளவில் புகார்தாரராகிய

இந்துராணி மேலப்பண்ணைக்குளத்தில் உள்ள அவரது வீட்டிற்கு முன்பு நின்று கொண்டிருக்கும் போது எதிரி புகார்தாரரிடம் சென்று குடிக்க தண்ணீர் கேட்டுள்ளார். புகார்தாரருக்கு அவரது நடவடிக்கை பிடிக்காததால் வீட்டில் தண்ணீர் இல்லை என்று கூறியதற்கு எதிரியானவர் ஏண்டி தேவிடியா எனக்கு எல்லாம் தண்ணீர் தரமாட்டியா என்னையெல்லாம், உனக்கு பிடிக்காதா என்று சொல்லி திடீரென புகார்தாரரின் பின்னால் கூடி கட்டிபிடித்து மானபங்கப்படுத்தியுள்ளார். உடனே புகார்தாரர் அவனிடமிருந்து தப்பிக்க எதிரியின் வலது கையை கடித்துவிட்டு, அலறி கத்தவும், எதிரி என்னடி தேவுடியா கடிக்கிற என்று சொல்லி புகார்தாரரின் கன்னத்தில் அடித்து சேலை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டு வலது கை புஜத்தில் மிதித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும், அப்போது புகார்தாரரின் அலறல் சத்தம் கேட்டு சாட்கள் காந்தி, பூரணம், மாரியம்மாள், முனீஸ்வரி ஆகியோர்கள் ஓடிவந்து எதிரியை பிடிக்க முயன்ற போது எதிரி அவர்களை பார்த்து பக்கத்தில் வந்ததால் உங்களை கொன்றுவிடுவேன் என்று மிரட்டிவிட்டு தப்பித்து சென்றுள்ள குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 354, 323, 506(2) and 4 of TNPHW Act ன் கீழ் அபிராமம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி பிணையில் சென்றுள்ளதால் அவருக்கு அழைப்பாணைகள் அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு குவிமுச பிரிவு 207 ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசத்திற்கு பின் 05-06-2023 ம் தேதியன்று எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு. 240(1) ன் படி எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 354, 323, 506(2) and 4 of TNPHW Act ன் கீழ்


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.06.05 15:23:19 +0530

குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு. 240(2) ன் படி எதிரிக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு. 242–ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் அ.சா.1 மற்றும் எதிரி சமாதானமாக சென்று விட்டதாக பிரிவு 320 (2) குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சமரசம் செய்துகொள்ள முடியாத குற்றம் என்பதால் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சமரச மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.4** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. <u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்</u>**

i. அரசுத் தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் பிறழ்சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

ii. அசா.4 அபிராமம் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.நாகராஜபிரபு அவரது கையொப்பம் நன்கு பரிட்சயம் என்றும், ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக கூறி சார்பு ஆய்வாளர் திரு.நாகராஜபிரபு அவர்கள் கடந்த 14.02.2020ம் தேதியன்று 09.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 அளித்த புகாரைப் பெற்று நிலையக் குற்ற எண்.73/2020 இதச பிரிவுகள் 294(பி), 323, 354, 506(2) and 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், அன்றே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை

பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும், சம்பவ சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரியை காரணம் கூறி கைது செய்து உச்சநீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், அத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

iii. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து குவிமுச.313(1)(ஆ) பிரிவின் படி கேள்விகள் கேட்க எதிரி சாட்சியங்களை பொய் என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. <u>**தீர்வுக்குரிய பிரச்சனை :-**</u>

i. எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 354, 323, 506(2) and 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்கக்கூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7. அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:-**

i. அசா.1 வழக்கின் நிகர்நிலை புகார்தாரர் ஆவார். அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரியால் தனக்கு காயம் ஏற்படவில்லை என்றும், கூட்டத்திற்குள் சென்று கீழே விழுந்ததில் தனக்கு லேசான காயம்பட்டதாகவும், தனக்கு ஏற்பட்ட லேசான காயத்திற்கு தான் மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்றும், இது குறித்து அபிராமம் போலீசாரிடம் சொன்ன போது போலீசார் ஒரு வெள்ளைப் பேப்பரில் கையொப்பம் (அ.சா.ஆ.1) பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். சம்பவ கண்ணுற்ற சாட்சியாக சேர்க்கப்பட்ட அ.சா.2 தனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும் சாட்சியம்

அளித்துள்ளார். மேற்படி இருவரின் சாட்சியமும் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

ii. இவ்வழக்கில் அ.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்ட சிறப்பு சார்பு அவர்கள் தனது சாட்சியத்தில் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு. நாகராஜபிரபு அவர்கள் கடந்த 14.02.2020 ம் தேதியன்று 09.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் **(அ.சா.ஆ.3)** பெற்று நிலையக் குற்ற எண்.73/2020 இதச பிரிவுகள் 294(பி), 354, 323, 506(2) and 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றே 10.00 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் **(அ.சா.ஆ.5)** மற்றும் மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ.6)** தயார் செய்தும், சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாக கூறியுள்ளார். ஆனால் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் தான் சொந்த வேலையாக அபிராமம் காவல் நிலையம் வழியாக சென்ற போது போலீசார் ஒரு வெள்ளைத் தாளில் கையொப்பம் **(ஆ.சா.ஆ.2)** பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.4 கூறியபடி சம்பவ இடத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்யப்பட்டதா என்பது குறித்து அரசுத் தரப்பில் நம்பும்படியான சாட்சியம் அளிக்கப்படவில்லை.

iii. மேலும் அ.சா.4 ன் சாட்சியத்தின் படி சம்பவ இட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், வழக்கின் எதிரியை 14.02.2020 ம் தேதி 11.30 மணிக்கு நல்லூர் பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து காரணம் கூறி கைது செய்து உச்சநீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், அத்துடன் புலன்விசாரணை முடித்து இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அ.சா.4 ன் சாட்சியத்தால் எவ்வித பலனும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.05 15:23:40 +0530

செய்கின்றது. எனவே அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 354, 323, 506(2) and 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

iv. இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323, 354, 506(2) and 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

v. இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 05ம் நாள் வெள்ளிக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.05 15:23:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. இந்துராணி |

| | |
|---|---|
| அ.சா.2 | திருமதி. மாரியம்மாள் |
| அ.சா.3 | திருமதி. பாண்டியம்மாள் |
| அ.சா.4 | திருமதி. மலர்க்கொடி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 14.02.2020 | புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.2 | 14.02.2020 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 14.02.2020 | புகார் மனு |
| அ.சா.ஆ.4 | 14.02.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 14.02.2020 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 14.02.2020 | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்றுபொருள்:–** இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:–**இல்லை

**குறிப்பு :–**

1. எதிரி வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.05 15:24:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.